

நேற்று முன்தினம் (22.01.2025) புதுதில்லி யில் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களை தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து திருச்சி மாவட்டம் மணப்பாறையில் வருகின்ற ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை நடைபெறவுள்ள பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி குறித்த தகவல்களை தெரிவித்து, தற்போது நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளின் நிலை குறித்து எடுத்துரைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு. 3345–லேயே, தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்பதற்கான ஆய்வு முடிவுகளை வெளியிட்டார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025), ஏப்ரல் 2025ல் நடைபெற உள்ள எவரெஸ்ட் எக்ஸ்பெடிஷனில் (எவெரெஸ்ட் பயணம்) கலந்து கொள்ள உள்ள தமிழ்நாடு வீரர் யு.ஆஷிஷ்க்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025), இந்தியாவில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மதிப்புமிக்க விருதான அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்குவாஷ் விளையாட்டு வீரா அபய் சிங், பாரா பேட்மிண்டன் வீராங்கனைகள் செல்வி. துளசிமதி முருகேசன், செல்வி. நித்யா ஸ்ரீ சுமதி சிவன், செல்வி. மனிஷா ராமதாஸ் ஆகியோரை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நாளை 25 ஆம் தேதி மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

# கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரையாற்றுகிறார் !

### மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வருக!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 24 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் நாளை 25ஆம் தேதி மாலை நடைபெறும் மொழிப் போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார். வரலாற்று சிறப்பு மிக்க இப்பொதுக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று இதுவரை இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை என்ற சரித்திர சாதனையை படைக்கும் வகையில் பல்லாயிரக்கணக்கில் கழகத்தினர் அலைகடலென திரண்டு வர வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர், தமிழக குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப் போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் நாளை 25 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில், கண்டோன்மெண்ட் பல்லாவரம், இராஜேந்திரபிரசாத் சாலை, தெரசா பள்ளி அருகில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, முன்னிலையிலும், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரவேற்புரையிலும் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, சிறப்புரை ஆற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி, தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ. விசுவ நாதன்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆர்.மனோகரன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச் செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், மற்றும் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில - மாவட்ட நிர்வாகிகள், நகராட்சி - பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.

“தமிழக மக்களின் நல்வாழ்வே தன் வாழ்வு” என்று நாளும் ஓயாமல் உழைத்து வரும், தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், நாட்டு மக்கள் அனைவரும் போற்றி பாராட்டுகின்ற வகையில் நல்லாட்சியை நடத்தி சரித்திர சாதனை படைத்து வரும், தன்னேரில்லா தலைவர், தமிழக முதல்வர் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி அவர்கள், நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் பங்கேற்று வீர உரையாற்றுகிறார், என்ற செய்தியை அறிந்தவுடன் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கழக தொண்டர்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



நாளை கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் நடைபெறும் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தை திறந்த வெளி மாநாடு போல மிகவும் எழுச்சியுடன் பிரம்மாண்டமான மேடை அமைத்து நடத்திட ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

கோலாகலமாக நடைபெறும் இப்பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாநகர பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - சிற்றூர்களில் இருந்தும் கழகத் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக வரலாற்றில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை என்று வரலாற்று சாதனையை படைக்கும் வகையில், மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத் தோழர்களும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று புதியதோர் வரலாற்றை படைத்திட வேண்டும் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

இந்திய திருநாடே போற்றி பாராட்டும் வகையில், No 1 முதல்வர் என்ற பெருமையை பெற்று இந்திய வரலாற்றில் இடம்பிடித்த தன்னிகரில்லா முதல்வர் பாசமிகு தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வது,

“நமது உரிமை” “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் நாளை 25ஆம் தேதி மாலை 4.30 மணிக்கெல்லாம் கண்டோன்மெண்ட் பல்லாவரத்திற்கு அலைகடலென திரண்டு வந்திட வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.

கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் கடல் வெள்ளம் புகுந்தது போல காட்சியளிக்கின்ற வகையில் மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் திரண்டு வந்து பங்கேற்று, பேரறிஞர் அண்ணா பிறந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்போம் என இருகரம் கூப்பி அழைக்கின்றேன்.

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் கழக தீரர்கள் பெரும் படை கூடியது என்ற வரலாற்று சாதனையை படைத்திடும் வகையில், கண்டோன்மெண்ட் பல்லாவரமே குலுங்கிடும் வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத்தினரும் பொது மக்களும் எழுச்சியுடன் திரண்டு புதிய சரித்திரம் படைப்போம் வாரீர்! வாரீர்!! என்று அனைவரையும் மனம் மகிழ்ந்து அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### கலாநிதி வீராசாமி எம்.பி. தலைமையில்

# தி.மு.க. அயலக அணி சார்பில் இசை வெளியீட்டு விழா!

### அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வெளியிடுகிறார்!

சென்னை, ஜன. 24 -

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக அயலக அணி சார்பில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் உருவாகியுள்ள, கழகப் பாடல் நான்கினை இன்று (24-1-2025) காலை 10 மணியளவில் தேனாம்பேட்டை ஹயாத் ஹோட்டலில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி , கழக மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர். கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக அயலக அணி இணைச் செயலாளர் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் தொகுப்புரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி வரவேற்புரையாற்றுகின்றார்.

கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் கண்ணிகை ஜி. ஸ்டாலின் மற்றும் அயலக அணி மாநில இணைச் மற்றும் துணைச் செயலாளர்கள் டாக்டர். எஸ்.செந்தில் குமார், வழக்கறிஞர் பி. புகழ் காந்தி, எஸ்.உமாராணி எம்.சி, விஜயன் ராமகிருஷ்ணன் எம். சி, முத்துவேல் ராமசாமி, சேகர்.ஜே. மனோகரன், எ. குமரி பாபு வினி பிரட் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

### அர்ஜுனா விருது பெற்ற

# தமிழ்நாட்டு வீரர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

### தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பாராட்டு!

சென்னை, ஜன. 24 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற உள்ள ஏ.டி.பி டென்னிஸ் போட்டிக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலை மற்றும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.14.48 லட்சம் மதிப்பில் அதிநவீன பந்தய சைக்கிள்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க செலவீன தொகைக்கான காசோலைகளை வழங்கி, இந்தியாவின் மதிப்புமிக்க அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாடு வீரர், வீராங்கனைகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனை களை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.01.2025) சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி டென்னிஸ் போட்டிக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலை மற்றும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.14.48 லட்சம் மதிப்பில் அதிநவீன பந்தய சைக்கிள்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க செலவீன தொகைக்கான காசோலைகளை வழங்கி, இந்தியாவின் மதிப்புமிக்க அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாடு வீரர், வீராங்கனைகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்க னைகளை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்க தலைவர் விஜய் அமிர்தராஜ் அவர்களிடம் வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில், ஏப்ரல் 2025ல் நடைபெற உள்ள எவரெஸ்ட் எக்ஸ்பெடிஷனில் (எவெரெஸ்ட் பயணம்) கலந்து கொள்ள உள்ள தமிழ்நாடு வீரர் யு.ஆஷிஷ் அவர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையும், தோஹாவில் நடைபெற உள்ள வாள்சண்டை போட்டியில் கலந்து கொள்ள ஸ்ரீ.சரவணன் அவர்களுக்கு ரூ.1.40 லட்சத்திற்கான காசோலையும், பன்னாட்டு அளவிலான சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ள செல்வி. ஆர். ஷாரச்சி சாய் அவர்களுக்கு ரூ.70 ஆயிரத்திற்கான காசோலையும், சைக்ளிங் விளையாட்டு வீரர்களான ஸ்ரீநாத் லட்சுமிகாந்த் மற்றும் பி.பிரதீப் ஆகிய இருவருக்கும் மொத்தம் ரூ. 7,38,403/ செலவில் அதிநவீன பந்தைய சைக்கிள்களையும் வழங்கினார்

இந்தியாவில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மதிப்புமிக்க விருதான அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அபய் சிங் (ஸ்குவாஷ்), செல்வி. துளசிமதி முருகேசன் (பாரா பேட்மிண்டன்), செல்வி. நித்யா ஸ்ரீ சுமதி சிவன் (பாரா பேட்மிண்டன்) மற்றும் செல்வி. மனிஷா ராமதாஸ் (பாரா பேட்மிண்டன்) ஆகியோருக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

மேலும் இன்றைய நிகழ்வில் தேசிய அளவிலான கூடைப் பந்து போட்டி மற்றும் தேசிய அளவிலான கையுந்து போட்டி, இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்திய 68 வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தேசிய கூடைப் பந்து போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டின் 60 வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இன்று – முரசொலி துணை ஆசிரியர்

# காஞ்சி கருணா (எ) கே.கருணாநிதி இல்ல மணவிழா!

### திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு நடத்திவைக்கிறார்!

சென்னை, ஜன. 24 -

முரசொலி துணை ஆசிரியர் காஞ்சி கருணா என்கிற கே.கருணாநிதி - கே.ரமாவதி ஆகியோரின் புதல்வர் கே.திவாகர்க்கும், ஆர்.வின்சென்ட் - வி.எலிசபத் ராணி ஆகியோரின் புதல்வி இ.வி.கிறிஸ்டினாவுக்கும் மணவிழா இன்று (24.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில், சென்னை அசோக் நகர் ஜவஹர்லால் நேரு சாலை (நூறடி சாலை) யில் அமைந்துள்ள எம்.பி.கே.மகாலில் நடைபெறுகின்றது.

இம் மணவிழாவை திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை கே.ராஜா, திருமதி லலிதா ராஜா ஆகியோர் வரவேற்கின்றனர்.

**மணவிழா வரவேற்பு!**

அதனைத் தொடர்ந்து இன்று (24.1.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நுங்கம்பாக்கம் பாம்குரோவ் ஓட்டலில் (அண்ணா மேம்பாலம் அருகில்) நடைபெறுகின்றது.

மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், ஆன்றோர் - சான்றோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.






கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்க நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலந்தூர் வடக்கு தெற்கு பகுதி, கண்டோன்மெண்ட் நகரம், புனித தோமையர்மலை வடக்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், நகர செயலாளர் டி.பாபு, ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர். உள்ளனர்.